F.Y.
March 2017

Reg. No. ....................................

Name .......................................

**640**

## Part - III

## TAMIL (OPTIONAL)

Maximum : 80 Scores

Time : **2½** Hours

Cool off time : **15** Minutes

***General Instructions to Candidates :***

- There is a 'Cool off time' of 15 minutes in addition to the writing time of 2½ hrs.
- You are neither allowed to write your answers nor to discuss anything with others during the 'cool off time'.
- Use the 'cool off time' to get familiar with questions and to plan your answers.
- Read the questions carefully before answering.
- All questions are compulsory and only internal choice is allowed.
- When you select a question, all the sub-questions must be answered from the same question itself.
- Electronic devices except nonprogrammable calculators are not allowed in the Examination Hall.

பொதுவழிமுறைகள் :-

- விடை எழுத தந்துள்ள 2½ மணிகளுக்கு மேலாக தொடக்கத்தில் 15 நிமிடங்கள் ஓய்வு நேரமாக (cool off time) தரப்பட்டுள்ளது. இந்நேரத்தில் விடை எழுதவோ விவாதிக்கவோ கூடாது.
- இந்நேரத்தில் வினாக்களைப் படித்துப்புரிந்து கொள்ளவும் விடையை திட்டமிடவும் பயன்படுத்த வேண்டும்.
- எல்லா வினாக்களுக்கும் விடை எழுத வேண்டும்.
- சில வினாக்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ள குறிப்புகளைப் பயன்படுத்தி விடை எழுதுக.
- எலக்ட்ரானிக்ஸ் சாதனங்கள், கால்குலேட்டரை தவிர அனுமதியில்லை.

**(1 முதல் 10 வரையுள்ள வினாக்களுக்குரிய விடைகளைத் தேர்ந்தெடுத்து எழுதுக.)** **10 × 1 = 10**

**1.** எதுகை மோனை அமைந்துள்ள கவிதை வடிவம்

(அ) மரபுக்கவிதை (ஆ) புதுக்கவிதை

(இ) ஹைக்கூ (ஈ) நாட்டுப்புறப்பாடல்

**2.** "இராமன் இராவணனைக் கொன்றான்" - இவ்வாக்கியத்தின் செயப்படுபொருள்

(அ) இராமன் (ஆ) கொன்றான்

(இ) இராவணன் (ஈ) செயப்படுபொருள் இல்லை

**3.** 'அவருடைய சினிமா மொழி ஆளுமை அட்டகாசமான ஒன்று' என்று பாலுமகேந்திரா சொல்லும் அளவுக்குப் பிரமிப்பை ஏற்படுத்தியவர்

(அ) சத்தியஜித்ரே (ஆ) அகிரா குரோசவா

(இ) ராமு காரியட் (ஈ) கிரீஷ் கர்னாடு

**4.** கருத்தைப் புலப்படுத்துவதில் ஒருவரின் தேர்ச்சியைக் காட்டுவது, அவரது

(அ) மொழித்திறம் (ஆ) மொழி ஆர்வம்

(இ) மொழிப்புலமை (ஈ) மொழி ஆய்வு

**5.** 'கண்ணன் உண்டான்' என்ற தொடர் காட்டும் வினை

(அ) எச்சவினை (ஆ) தன்வினை

(இ) பிறவினை (ஈ) செயப்பாட்டுவினை

6. வலைப்பூக்களை வடிவமைத்துச் செயலாக்குவதில் பரவலாகப் பயன்பாட்டில் உள்ள நிறுவனம்

(அ) யாகூ (ஆ) எம்.எஸ்.என்

(இ) கூகிள் (ஈ) ரீடிஃப்மெயில்

7. திரிகடுகம் என்னும் நூலை இயற்றியவர்

(அ) காரியாசான் (ஆ) நல்லாதனார்

(இ) முன்றுரையரையனார் (ஈ) விளம்பிநாகனார்

8. 'கோட்டயத்திற்குச் செல்லும் பாதை எது?' என்பது

(அ) ஐய வினா (ஆ) அறியா வினா

(இ) அறிவினா (ஈ) ஏவல் வினா

9. மரபின் விருத்தப்பாடல் ஓசையோடு புதுக்கவிதைகள் படைத்தவர்

(அ) ந. பிச்சமூர்த்தி (ஆ) மு. மேத்தா

(இ) அப்துல் ரகுமான் (ஈ) ஞானக்கூத்தன்

10. 'வகரம்' என்பது --------------- ஒலியாகும்.

(அ) அண்ண (ஆ) மூக்கு

(இ) பல்லிதழ் (ஈ) இதழ்

**(11 முதல் 14 வரையுள்ளவற்றைச் சரியாகப் பொருத்துக.)** **4 × 1 = 4**

**11.** மதுரைக்காஞ்சி - விளம்பிநாகனார்

**12.** பழமொழி - காரியாசான்

**13.** சிறுபஞ்சமூலம் - மாங்குடி மருதனார்

**14.** நான்மணிக்கடிகை - முன்றுறை அரையனார்

**(15 முதல் 18 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் மூன்று கருத்துகள் அமையும்படி விடை எழுதுக.)** **4 × 3 = 12**

**15.** "இலக்கணங்களுக்கு அப்பால்

இருக்கிறது அழகு

செயற்கைக்கு அப்பால்

இருக்கிறது சுதந்திரம்

எங்கே அழகும் சுதந்திரமும் உண்டோ

அங்கேதான்

மானுடம் திருவிழாக் கொண்டாடுகிறது"

- என்ற அப்துல் ரகுமானின் வரிகளை விமர்சனம் செய்க.

**16.** இணையதளம், வலைப்பூக்கள் இவற்றிற்கிடையேயான வேறுபாடுகளைக் கண்டறிந்து குறிப்பு தயாரிக்க.

**17.** “கருத்துப் பரிமாற்றத்திற்கான ஒரு கருவி மட்டுமே மொழி” இக்கூற்றை நிறுவுக.

**18.** போரினால் ஏற்படும் தீமைகள் குறித்து மக்கள் மத்தியில் விழிப்புணர்வு ஏற்படுத்த மூன்று முத்திரை வாக்கியங்கள் எழுதுக.

**(19 முதல் 23 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் நான்கு கருத்துகள் அமையும்படி விடை எழுதுக.)** **5 × 4 = 20**

**19.** ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை; இழுக்கத்தின்
எய்தும் எய்தாப் பழி

- இக்குறட்பாவை அசை, சீர் பிரித்து எழுதுக.

**20.** கிராமிய கலைவிழாவிற்குக் கரகாட்டக் கலைஞர் ஒருவர் வருகை தந்துள்ளார். நேர்காணல் பொறுப்பினை ஏற்றுக்கொண்ட நீங்கள் வினா நிரல் ஒன்றைத் தயார் செய்யுங்கள். (நான்கு வினாக்கள்)

**21.** “தமிழ் மொழியின் தனித்தன்மைகள்” என்னும் தலைப்பில் சிறுகட்டுரை வரைக.

**22.** பாலுமகேந்திராவின் சினிமாத்துறை அனுபவத்தைக் கலந்தாய்வு செய்து அனுபவக் குறிப்பாகத் தருக.

**23.** உழவர் பாடல்கள் வாயிலாக அறியலாகும் உழவுத் தொழில் தொடர்பான செய்திகளைத் தொகுத்தெழுதுக.

**(24, 25 வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் ஐந்து கருத்துகள் அமையும்படி விடை எழுதுக.)** **2 × 5 = 10**

**24.** கீழ்வரும் பழமொழிகளை விளக்கி எழுதுக.

★ காக்கைக்கும் தன் குஞ்சு பொன் குஞ்சு

★ யானைக்கும் அடி சறுக்கும்

**25.** குருவிக்கு வேண்டுகோள் என்ற கவிதை உணர்த்தும் நகரமயமாதலின் விளைவுகளைத் திரட்டி மதிப்பீடு செய்க.

**(26 முதல் 28 வரையிலான வினாக்களுக்கு இரண்டு பக்கங்களுக்குக் குறையாமல் கட்டுரை வடிவில் விடை தருக.)** **3 × 8 = 24**

**26.** இணையதளம் வழியாகக் கல்வி பயில்வதால் விளையும் பயன்களை விளக்கி சிறுகட்டுரை எழுதுக.

***(அல்லது)***

"இணையதளமும் இளந்தலைமுறையினரும்" என்ற தலைப்பில் ஒரு சொற்பொழிவுக் கட்டுரை தயாரிக்க.

**27.** மொழியியலின் பிரிவுகளைப் பகுத்துக்காட்டி "கருத்துப் பரிமாற்றத்திற்கான ஒரு கருவி மட்டுமே மொழி" என்னும் தலைப்பில் கட்டுரை வரைக.

***(அல்லது)***

*(அல்லது)*

"மொழியால் ஆகாயத்தில் பந்தல்போட முடியும். அருவமானதையும் உருவம்போல் விளக்கி வர்ணிக்க முடியும். கண்முன் இல்லாதவற்றையும் சொல்லோவியமாக்கி மனக்கண்ணில் காட்ட முடியும்" - இக்கருத்தின் அடிப்படையில் 'தமிழ் மொழியின் சிறப்புகள்' என்னும் தலைப்பில் கருத்தரங்கக் கட்டுரை தயாரிக்க.

**28.** இயற்கை உணவு உண்பதால் விளையும் பயன்களை விளக்கிக் கட்டுரை எழுதுக.

*(அல்லது)*

சுற்றுப்புறச் சூழல் தினவிழாவில் கட்டுரை வாசிக்க "இயற்கையோடு இயைந்த வாழ்வே நலமான வாழ்வு" என்னும் தலைப்பில் கட்டுரை வரைக.